# இலங்கைப் பாராளுமன்றம்

# தலைப்பு 16

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2012

## உள்ளடக்கம்


| இலக்கம் | விபரம் | பக்கம் |
|---|---|---|
| 1. | பணிகள்..... | 2 |
| 2. | பிரதான தொழிற்பாடுகள்... | 2 |
| 3. | நிறுவனக் கட்டமைப்பு | 2 - 4 |
| 4. | பணியாட்டொகுதி விபரங்கள் | 4 |
| 5. | **வருடாந்த செயலாற்றுகை** | |
| 5.1 | நிதி நிர்வாகம் | 5 - 11 |
| 5.2 | குழுக்கள் | |
| 5.2.1 | ஆலோசனைக் குழுக்கள் | 11 - 13 |
| 5.2.2 | விசேட நடவடிக்கைகளுக்கான குழுக்கள் | 13 - 18 |
| ( i ) | தெரிவுக் குழு | 13 |
| ( ii ) | சிறப்புரிமைகள் பற்றிய குழு | 13 |
| ( iii ) | உயர் பதவிகள் பற்றிய குழு | 13 - 14 |
| ( iv ) | நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு | 14 |
| ( v ) | அரசாங்கக் கணக்குகள் குழு | 14 - 15 |
| ( vi ) | அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு | 16 - 18 |
| ( vii ) | பொது மனுக்கள் பற்றிய குழு | 18 |
| 5.2.3 | விசேட குழுக்கள் | 19 - 20 |
| 5.3 | சட்டமூல அலுவலகம் | 20 - 21 |
| 5.4 | சபை ஆவண அலுவலகம் | 21 - 22 |
| 5.5 | நிறுவனத்தின் ஏனைய பிரிவுகளால் வழங்கப்பட்ட பங்களிப்பு சுருக்கமாக | |
| 1 ) | படைக்கலச் சேவிதர் திணைக்களம் | 22 - 23 |
| 2 ) | ஹன்சாட் திணைக்களம் | 23 |
| 3 ) | பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் அலுவலகம் | 24 |
| 4 ) | பாராளுமன்ற நூலகம் | 24 - 25 |
| 5 ) | தாபன அலுவலகம்/உறுப்பினர் சேவைகள் அலுவலகம் | 25 |
| 6 ) | வெளிநாட்டுத் தொடர்புகள் மற்றும் ஒழுங்கு மரபுகள் அலுவலகம் | 26 |
| 7) | தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவ திணைக்களம் | 26 |

**பாராளுமன்றத்தின் நிறுவனக் கட்டமைப்பு** - படக்குறிப்பு (பின்னிணைப்பு – 01) 27

**2012 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இலங்கையின் சட்டங்கள்** - (பின்னிணைப்பு – 02)28

# இலங்கைப் பாராளுமன்றம்

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2012

# தலைப்பு - 16

## 1. பணிகள்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கமைய பாராளுமன்றமானது நாட்டின் சட்டவாக்க தத்துவத்தைக் கொண்டுள்ளது. பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகம் சகல பாராளுமன்றச் செயற்பாடுகளுக்குமான வசதிகளையும் சேவைகளையும் வழங்குவதோடு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சேவைகளையும் வழங்குகிறது.

## 2. பிரதான தொழிற்பாடுகள்

( i ) மக்களின் சட்டவாக்கத் தத்துவத்தைப் பிரயோகித்தல்
( ii ) அரச நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்
( iii ) நிறைவேற்றுத்துறையை மேற்பார்வை செய்தல்

## 3. நிறுவனக் கட்டமைப்பு

கௌரவ சபாநாயகரின் தலைமையிலான பாராளுமன்றத்தின் கடமைகளை ஆற்றுவதற்குத் தேவையான செயலக மற்றும் பணியாளர் சேவைகள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தினால் வழங்கப்படுகின்றன.

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகம் பின்வரும் திணைக்களங்களைக் கொண்டுள்ளது.
( **பின்னிணைப்பு 01 இல் நிறுவனக் கட்டமைப்பைப் பார்க்க**. )

1. படைக்கலச் சேவிதர் திணைக்களம்
2. நிர்வாகத் திணைக்களம்
3. ஹன்சாட் திணைக்களம்
4. இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம்
5. நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம்
6. உணவு வழங்கல், வீடு பராமரிப்புத் திணைக்களம்
7. சட்டவாக்க சேவைகள் திணைக்களம்
8. தகவல் முறைமைகள், முகாமைத்துவத் திணைக்களம்

### 3.1 படைக்கல சேவிதர் திணைக்களம்

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பின்வருவன அடங்கலாக முடியுமான வரை உயர்ந்த தரத்திலான சேவைகளை காலத்துக்கு உகந்ததும் வினைத்திறன் மிக்கதுமானதொரு முறையில் வழங்குவதன் மூலம் பாராளுமன்றத்தின் பயனுறுதியான தொழிற்பாட்டுக்கு உதவுதல்:

- வைபவரீதியான கடமைகள், பாராளுமன்ற சபா மண்டபத்தினுள் ஒழுங்கைப் பேணுதல், செங்கோலின் பொறுப்பும் பாதுகாப்பும், பாராளுமன்ற கட்டத்தினுள் விருந்தினர்களை அனுமதித்தல், கலரியை மேற்பார்வை செய்தல்

- பாராளுமன்றக் கட்டடத்தைப் பேணுதல் மற்றும் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியினுள் இடவசதிகளை ஒதுக்கீடு செய்தல்

- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் மூப்புரிமை நிரலைத் தயாரித்து பாராளுமன்றச் சபையில் அதற்கேற்ப ஆசன ஒதுக்கீடு செய்தல், ஆசன ஏற்பாடுகளை நிருவகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்

## 3.2 நிர்வாகத் திணைக்களம்

- ஆட்சேர்த்தல், திசைமுகப்படுத்தல், பயிற்சி, பணியாளர் அபிவிருத்தி, தொழில் பெறுநர் கல்வி மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களைக் கவனிக்கின்றது.

- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நிர்வாக உதவி மற்றும் பணியாளர் போக்குவரத்து வசதிகள் ஆகியவை இந்தத் திணைக்களத்தினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன. அப்பணிகளை ஆற்றுவதற்குப் பின்வரும் பிரிவுகள் பங்களிப்புச் செய்கின்றன:

    1. தாபன அலுவலகம்
    2. உறுப்பினர் சேவைகள் அலுவலகம்
    3. போக்குவரத்து அலுவலகம்

## 3.3 ஹன்சாட் திணைக்களம்

- பாராளுமன்ற நடவடிக்கைகள், பாராளுமன்றக் குழுக்கள், மாநாடுகள், மற்றும் பொதுநலவாய பாராளுமன்ற அமைப்பு மற்றும் அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாடுகள் ஆகியவற்றின் பக்கச்சார்பற்றதும், துல்லியமானதும், உரிய காலத்திலானதுமான அறிக்கையிடுதலையும், சுட்டி இடுதலையும் செவிப்புலப் பதிவுகளைக் கண்காணித்தலையும் உறுதிப்படுத்தல்.

## 3.4 இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம்

- பாராளுமன்ற வளாகம் பயனுறுதிமிக்க வகையிலும் வினைத்திறனுடனும் பேணப்படுவதையும் இந்நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பொதுக்கட்டிடமாகப் பாதுகாக்கப்படுவதையும் இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம் உறுதிப்படுத்துகின்றது.

- பௌதீக உட்கட்டமைப்பைப் பயனுறுதியுடன் முகாமைத்துவம் செய்வதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பணியாளர்களுக்கும் நவீன, வினைத்திறன் மிக்க பணிபுரியும் சூழலை வழங்குகின்றது.

## 3.5 உணவு வழங்கல், வீடு பராமரிப்புத் திணைக்களம்

- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பணியாளர்களுக்கும் விருந்தினர்களுக்கும் உணவுகளையும் பானங்களையும் வழங்குதல்.
- உணவகங்களையும் சமையலறைகளையும் முகாமைத்துவம் செய்தல்
- கட்டிடப் பராமரிப்பு

## 3.6 நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம்

- வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்தல், செலவின மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானத்தைத் திரட்டுதல் மற்றும் வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு; கணக்கீடு, இறுதிக் கணக்குகளை அறிக்கையிடுதல் மற்றும் தயாரித்தல்;
- பாராளுமன்றத்துக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், கொள்வனவு வழங்கல் பணிகளை மேற்கொள்ளல்.
- உறுப்பினர்களுக்கும், ஓய்வூதியம் பெறுவோருக்கும், பணியாளர்களுக்கும், வழங்குநர்களுக்கும் மற்றும் சேவைகளுக்குமான கொடுப்பனவுகள்.

நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களத்தின் கீழ் பின்வரும் பிரிவுகள் தொழிற்படுகின்றன:

1. நிதி, கணக்குகள் அலுவலகம்
2. வழங்கல்கள், சேவைகள் அலுவலகம்
3. உணவு வழங்கல், கணக்கீட்டு அலுவலகம்

## 3.7 சட்டவாக்க சேவைகள் திணைக்களம்

- சட்டமியற்றுதல், மேற்பார்வை மற்றும் பொது நிதி ஆகிய துறைகளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தொழில்சார் சேவைகளை வழங்குகின்றது.

- பின்வரும் பிரிவுகள் சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்றன:

1. சபை ஆவண அலுவலகம்
2. சட்டமூல அலுவலகம்
3. குழு அலுவலகம்
4. ஆலோசனைக்குழு அலுவலகம்
5. அரசாங்கக் கணக்குகள் குழு மற்றும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு அலுவலகம்
6. உரைபெயர்ப்பாளர் அலுவலகம்
7. நூலகம்

## 3.8 தகவல் முறைமைகள், முகாமைத்துவத் திணைக்களம்

கணினி வலையமைப்பின் முகாமைத்துவம் மற்றும் பாராளுமன்ற இணையத் தளத்தை பேணிவருதல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்களைப் பேணிவருதல் ஊடாக :

- பாராளுமன்றச் செயலகத்தின் தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான நிர்வாகச் செயற்பாடுகள்,
- பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதித்துவ, சட்டவாக்க மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள்,
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி பூரணமாக ஒருங்கிணைக்கப்பட்ட தகவல் முறைமை மூலமாக முக்கியமான பாராளுமன்ற விடயங்கள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுதலும் இற்றைப்படுத்தலும்,

என்பவற்றின் ஒட்டுமொத்த ஆற்றல்களை அதிகரித்தல்.

## 3.9 வெளிநாட்டு உறவுகள் மற்றும் ஒழுங்கு மரபுகள் அலுவலகமும், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவும் செயலாளர் நாயகத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்படுகின்றன.

# 4. பணியாளர் விபரங்கள்

2011ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியும் சேவையிலுள்ள உண்மையான ஆளணியும் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | | | | தற்போதுள்ள ஆளணி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பா.செ.நா. | கௌரவ சபாநாயகர் | கௌ பி.சபா. | கௌ கு.பி.த. | பா.செ.நா | கௌரவ சபாநாயகர் க | கௌ பி.சபா. | கௌ கு.பி.த. |
| குழு A – சிரேஷ்ட மட்டம் | 79 | 5 | 5 | 3 | 75 | 5 | 5 | 3 |
| குழு B – மூன்றாம் நிலை | 127 | 0 | 0 | 0 | 109 | 0 | 0 | 0 |
| குழு C – இரண்டாம் நிலை மட்டம் | 208 | 8 | 6 | 3 | 190 | 8 | 6 | 3 |
| குழு D – ஆரம்ப மட்டம் | 469 | 22 | 10 | 8 | 445 | 20 | 10 | 8 |
| அமய/ தற்காலிக | 17 | 3 | 0 | 0 | 17 | 3 | 0 | 0 |
| மொத்தம் (2011.12.31ஆம் திகதி உள்ளவாறு) | 900 | 38 | 21 | 14 | 836 | 36 | 21 | 14 |

2012ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் உள்ள பல்வேறு பதவிகளுக்காக 18 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர்.

# 5. செயலாற்றுகை

## 5.1 நிதி நிர்வாகம் - 2012ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கு அமைவான செலவினம் :

**2012ஆம் ஆண்டு செயல்முறை நிகழ்ச்சித்திட்டம் இல.1 இன் கீழ் மீண்டுவரும் செலவினமாகவும் மூலதனச் செலவினமாகவும் மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் ஒதுக்கீடும் அத்தகைய ஏற்பாடுகள் செலவிடப்பட்ட முறைமையும் கீழே தரப்பட்டுள்ளன :-**

டிஜிஎஸ்ஏ - 1

### ஒதுக்கீட்டுக் கணக்கு - 2012

செலவினத் தலைப்பு இல.: 16 அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் : பாராளுமன்றம்

| வருடாந்த மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்ட இல.: | வரவு செலவு மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத் தலைப்பு | (1) வரவு செலவு மதிப்பீட்டில் உள்ள ஏற்பாடு | (2) குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் | (3) நி.பி.66 மற்றும் நி.பி.69 க்கு ஏற்ப மாற்றங்கள் | (4) மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய விளைவு சேமிப்பு/மிகை (4 5) | பக்க இல.(டிஜிஎஸ்ஏ 2 படிவத்திற்கு தொடர்புடைய குறிப்பு) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| | மீண்டுவரும் | | | | | | | |
| 01 | மாண்புமிகு சபாநாயகரின் அலுவலகம் | 99,150,000 | 0 | -1,777,000 | 97,373,000 | 88,871,243 | 8,501,757 | 44 |
| 02 | பொது நிருவாகம் | 865,650,000 | 25,000,000 | -5,760,000 | 884,890,000 | 859,504,517 | 25,385,483 | 44 |
| 03 | கௌ. பா.உறுப்பினர்களுக்கான வசதிகள் | 612,050,000 | 20,000,000 | 7,537,000 | 639,587,000 | 621,868,413 | 17,718,587 | 44 |
| | உபமொத்தம் (மீண்டுவரும்) | 1,576,850,000 | 45,000,000 | 0 | 1,621,850,000 | 1,570,244,173 | 51,605,827 | 43 |
| | மூலதனம் | | | | | | | |
| 01 | மாண்புமிகு சபாநாயகரின் அலுவலகம் | 5,000,000 | 48,040,000 | 0 | 53,040,000 | 52,072,257 | 967,743 | 45 |
| 02 | பொது நிருவாகம் | 110,500,000 | 4,000,000 | 0 | 114,500,000 | 61,183,747 | 53,316,253 | 46 |
| 03 | கௌ. பா.உறுப்பினர்களுக்கான வசதிகள் | 9,500,000 | 0 | 0 | 9,500,000 | 1,902,416 | 7,597,584 | 47 |
| | உபமொத்தம் (மூலதனம்) | 125,000,000 | 52,040,000 | 0 | 177,040,000 | 115,158,420 | 61,881,580 | 43 |
| | மொத்தக் கூட்டுத்தொகை | 1,701,850,000 | 97,040,000 | 0 | 1,798,890,000 | 1,685,402,593 | 113,487,407 | 43 |

இந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் இணைந்த பகுதியாக விபரமான நிகழ்ச்சித் திட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளும் ஏனைய விபரமான கணக்கீட்டுக் கூற்றுக்களும் டிஜிஎஸ்ஏ 02 முதல் 10 வரையிலான படிவத்தில் பக்கம் 42 முதல் 72 வரையிலும் ஏனைய குறிப்புக்கள் பக்கம் 73 முதல் 77 (அ),(ஆ) வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கிலுள்ள இலக்கத் தொகைகள், ஏனைய விபரமான கூற்றுக்கள் மற்றும் குறிப்புக்கள் யாவும் சரியானவை என்றும், தொடர்புடைய கணக்குகள் திறைசேரி கணக்குப் புத்தகங்களுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் சரியாகவும் காணப்படுகிறது என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி:
திகதி :
W. M. N. P. IDDAWELA
Acting Secretary General of Parliament

பிரதான கணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர்:
திகதி : 2013. 4. 26
K. G. MERWIN JAYASHANTH
Director (Finance)
Parliament of Sri Lanka
Sri Jayewardenepura Kotte.

டிஜிஎஸ்ஏ - 2

# நிகழ்ச்சித்திட்ட ரீதியான ஒதுக்கீட்டுக் கணக்கு - 2012

செலவினத் தலைப்பு இல. : 16 அமைச்சு /திணைக்களம் / மாவட்டச் செயலகம் : பாராளுமன்றம்

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 01 - செயல்முறைச் செயற்பாடுகள்

## மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினத்தின் பொழிப்பு

| டிஜிஎஸ்ஏ படிவத்தில் குறிப்பிட்ட செலவினத்தின் தன்மை | (1) வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | (2) குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் | (3) நி.ப.66 மற்றும் நி.ப.69 க்கு ஏற்ப மாற்றங்கள் | (4) மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய விளைவு சேமிப்பு/(மிகை) ( 4 -5 ) | பக்க இல.(டிஜிஎஸ்ஏ படிவத்திற்கு தொடர்புடைய குறிப்பு) |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| (அ)மீண்டுவரும் (டிஜிஎஸ்ஏ 3) | **1,576,850,000** | 45,000,000 | 0 | **1,621,850,000** | 1,570,244,173 | **51,605,827** | **44** |
| (ஆ)முலதனம் (டிஜிஎஸ்ஏ 4) | **125,000,000** | 52,040,000 | 0 | **177,040,000** | 115,158,420 | **61,881,580** | **45 - 47** |
| **மொத்தம்** | **1,701,850,000** | **97,040,000** | **0** | **1,798,890,000** | **1,685,402,593** | **113,487,407** | |

டிஜீஎஸ்ஏ - 3

# கருத்திட்ட ரீதியான மீண்டுவரும் செலவினம்

**செலவினத் தலைப்பு இல. : 16** **அமைச்சு /திணைக்களம் / மாவட்டச் செயலகம் :** பாராளுமன்றம்

**நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 01 – செயல்முறைச் செயற்பாடுகள்**

| கருத்திட்ட இல. தலைப்பு மற்றும் வேதனாதிகள், அனைத்து கருத்திட்டங்களுக்குமான ஏனைய செலவினங்கள் | வருமாந்த மதிப்பீட்டில் உள்ள துக்கீடு | குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் ± | நி.ப.66 மற்றும் நி.ப.69 க்கு ஏற்ப மாற்றங்கள் ± | மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | மொத்தச் செலவினம் | தேறிய விளைவு சேமிப்பு/(மிகை) (4 - 5) |
|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **கருத்திட்ட இல. 01 மாண்புமிகு சபாநாயகரின் அலுவலகம்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 43,950,000 | 0 | 0 | 43,950,000 | 38,769,368 | 5,180,632 |
| ஏனைய கட்டணங்கள் | 55,200,000 | 0 | -1,777,000 | 53,423,000 | 50,101,875 | 3,321,125 |
| **உப மொத்தம்** | **99,150,000** | **0** | **-1,777,000** | **97,373,000** | **88,871,243** | **8,501,757** |
| **கருத்திட்ட இல. 02 பொது நிருவாகம்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 533,450,000 | **0** | -2,000,000 | 531,450,000 | 524,726,685 | 6,723,315 |
| ஏனைய கட்டணங்கள் | 332,200,000 | **25,000,000** | -3,760,000 | 353,440,000 | 334,777,832 | 18,662,168 |
| **உப மொத்தம்** | **865,650,000** | **25,000,000** | **-5,760,000** | **884,890,000** | **859,504,517** | **25,385,483** |
| **கருத்திட்ட இல. 03 கௌ. பா. உறுப்பினர்களுக்கான வசதிகள்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 100,000,000 | **0** | 0 | 100,000,000 | 90,999,229 | 9,000,771 |
| ஏனைய கட்டணங்கள் | 512,050,000 | **20,000,000** | 7,537,000 | 539,587,000 | 530,869,184 | 8,717,816 |
| **உப மொத்தம்** | **612,050,000** | **20,000,000** | **7,537,000** | **639,587,000** | **621,868,413** | **17,718,587** |
| **மொத்தத் தொகை** | **1,576,850,000** | **45,000,000** | **0** | **1,621,850,000** | **1,570,244,173** | **51,605,827** |

டிஜிஎஸ்ஏ - 4

# கருத்திட்ட ரீதியான மூலதனச் செலவினம்

**செலவினத் தலைப்பு இல. : 16** **அமைச்சு /திணைக்களம் / மாவட்டச் செயலகம் :** பாராளுமன்றம்

**நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்:** 01 - செயல்முறைச் செயற்பாடுகள்

**கருத்திட்ட இலக்கமும் தலைப்பும் :** 01 - மாண்புமிகு சபாநாயகரின் அலுவலகம்

| விடயக் குறயீடு | விடய இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விடயங்கள் சம்பந்தமான விபரம் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஏற்பாடு | நி.பி.66, நி.பி.69 மாற்றங்கள், குறை நிரப்ப ஏற்பாடு மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | மொத்த தேறிய ஏற்பாடு ( 1+2 ) | மொத்தச் செலவினம் | தேறிய விளைவு சேமிப்பு/(மிகை) ( 3 - 4 ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | | | | | |
| 2001 | | 11 | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 1,650,000 | 0 | **1,650,000** | 1,644,629 | **5,371** |
| 2002 | | 11 | பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 400,000 | 0 | **400,000** | 314,283 | **85,717** |
| 2003 | | 11 | வாகனங்கள் | 2,000,000 | 0 | **2,000,000** | 1,795,298 | **204,702** |
| | | | **மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு** | | | | | |
| 2101 | | 11 | வாகனங்கள் | 0 | 48,040,000 | **48,040,000** | 48,040,000 | **0** |
| 2102 | | 11 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 750,000 | 0 | **750,000** | 201,819 | **548,181** |
| 2103 | | 11 | பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 200,000 | 0 | **200,000** | 76,228 | **123,772** |
| | | | **மொத்தம்** | **5,000,000** | **48,040,000** | **53,040,000** | **52,072,257** | **967,743** |

# கருத்திட்ட ரீதியான மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல. : 16 அமைச்சு /திணைக்களம் / மாவட்டச் செயலகம் : பாராளுமன்றம்

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 01 - செயல்முறைச் செயற்பாடுகள்

கருத்திட்ட இலக்கமும் தலைப்பும் : 02 - பொது நிருவாகம்

| விடயக் குறயீடு | விடய இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விடயங்கள் சம்பந்தமான இலக்கம் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஏற்பாடு | நி.பி.66, நி.பி.69 மாற்றங்கள், குறை நிரப்ப ஏற்பாடு மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | மொத்த தேறிய ஏற்பாடு (1+2) | மொத்தச் செலவினம் | தேறிய விளைவு சேமிப்பு/(மிகை) (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | | | | | |
| 2001 | | 11 | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 28,000,000 | 0 | **28,000,000** | 18,498,303 | **9,501,697** |
| 2002 | | 11 | பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 15,000,000 | 0 | **15,000,000** | 11,351,873 | **3,648,127** |
| 2003 | | 11 | வாகனங்கள் | 2,500,000 | 0 | **2,500,000** | 625,000 | **1,875,000** |
| | | | **மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு** | | | | | |
| 2101 | | 11 | வாகனங்கள் | 0 | 4,000,000 | **4,000,000** | 0 | **4,000,000** |
| 2102 | | 11 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் | 10,000,000 | 0 | **10,000,000** | 6,125,258 | **3,874,742** |
| 2103 | | 11 | பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 54,000,000 | 0 | **54,000,000** | 24,042,773 | **29,957,227** |
| | | | **கொள்திறன் கட்டுமானம்** | | | | | |
| 2401 | | 11 | அறிவு விருத்தி மற்றும் நிறுவன கட்டமைப்பு அபிவிருத்தி | 1,000,000 | 0 | **1,000,000** | 540,540 | **459,460** |
| | | | **மொத்தம்** | **110,500,000** | **4,000,000** | **114,500,000** | **61,183,747** | **53,316,253** |

# கருத்திட்ட ரீதியான மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல. : 16 — அமைச்சு /திணைக்களம் / மாவட்டச் செயலகம் : பாராளுமன்றம்

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 01 - செயல்முறைச் செயற்பாடுகள்

கருத்திட்ட இலக்கமும் தலைப்பும் : 03 - கௌரவ பாராளுமன்ற றுப்பினர்களுக்கான வசதிகளைச் செய்து வழங்குதல்

| விடயக் குறயீடு | விடய இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விடயங்கள் சம்பந்தமான இலக்கம் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஏற்பாடு | நி.பி.66, நி.பி.69 மாற்றங்கள், குறை நிரப்ப ஏற்பாடு மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | மொத்த தேறிய ஏற்பாடு (1+2) | மொத்தச் செலவினம் | தேறிய விளைவு சேமிப்பு/(மிகை) (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | | | | | |
| 2001 | | 11 | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 4,000,000 | 0 | **4,000,000** | 1,000,000 | **3,000,000** |
| | | | **மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு** | | | | | |
| 2102 | | 11 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் | 5,000,000 | 0 | **5,000,000** | 902,416 | **4,097,584** |
| 2103 | | 11 | பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 500,000 | 0 | **500,000** | 0 | **500,000** |
| | | | **மொத்தம்** | **9,500,000** | **0** | **9,500,000** | **1,902,416** | **7,597,584** |

**அரச அலுவலர்களின் முற்பணக்கணக்கு :-**

2012 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலிருந்த அரச அலுவலர்கள் முற்பண "பீ" கணக்கிற்கான அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளும் உண்மைத் தொகைகளும் கீழே தரப்பட்டுள்ளன

| **விபரங்கள்** | **2012இல் அங்கீகரிக்கப்பட்ட எல்லை (ரூபா)** | **உண்மைத் தொகை 2012 (ரூபா)** | |
|---|---|---|---|
| செலவினத்தின் உச்ச எல்லை | 39,500,000 | 01601-1 | 26,907,810.53 |
| | | 01601-2 | 213,213.39 |
| பெறுகைகளின் அதிகுறைந்த எல்லை | 20,000,000 | 01601-1 | 27,932,045.90 |
| | | 01601-2 | 0.00 |
| அதிகூடிய பற்று மீதி | **175,000,000** | **144,082,287.03** | |

## 5.2 குழுக்கள்:-

### 5.2.1 ஆலோசனைக் குழுக்கள் :

நிலையியல் கட்டளை இல.104 இன் கீழ் ஆலோசனைக் குழுக்கள் தாபிக்கப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டினுள் கௌரவ உறுப்பினர்களின் 1084 பிரேரணைகள் ஆலோசனைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக அமைச்சுக்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்படுகின்ற ஆண்டறிக்கைகள் மற்றும் ஒவ்வொரு அமைச்சினாலும் சமர்ப்பிக்கப்படுகின்ற சட்ட மூலங்கள் இக் குழுக்களில் ஆராயப்பட்டு சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆலோசனைக் குழுக்களின் எண்ணிக்கை 54 ஆகுமென்பதோடு, 175 ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

| **தொடர் இல** | **ஆலோசனைக் குழு** | **நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | சுற்றாடல் | 02 |
| 2. | இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி | 04 |
| 3. | பெற்றோலியக் கைத்தொழில் விவகாரங்கள் | 04 |
| 4. | நீர் வழங்கல், வடிகாலமைப்பு | 07 |
| 5. | மரபார்ந்த கைத்தொழில்கள், சிறு தொழில்முயற்சிஅபிவிருத்தி | 02 |
| 6. | உள்ளூராட்சி, மாகாண சபைகள் | 01 |
| 7. | பௌத்த சாசன, மத அலுவல்கள் | 02 |
| 8. | அரச முகாமைத்துவ, மறுசீரமைப்பு அலுவல்கள் | 02 |
| 9. | நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவம் | 01 |
| 10. | அனர்த்த முகாமைத்துவம் | 05 |
| 11. | சுகாதாரம் | 01 |
| 12. | புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு | 05 |
| 13. | கைத்தொழில், வாணிபம் | 04 |

| தொடர் இல | ஆலோசனைக் குழுவின் பெயர் | கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 14. | நிர்மாணிப்பு, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் | 04 |
| 15. | மின்வலு, எரிசக்தி | 03 |
| 16. | பொருளாதார அபிவிருத்தி | 09 |
| 17. | அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி | 02 |
| 18. | பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் | 02 |
| 19. | பாராளுமன்ற அலுவல்கள் | 04 |
| 20. | மீள் குடியேற்றம் | 02 |
| 21. | தபால் சேவைகள் | 02 |
| 22 | தேசிய மரபுரிமைகள் | 03 |
| 23. | சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் | 02 |
| 24. | நீதி | 03 |
| 25. | தொழில், தொழில் உறவுகள் | 02 |
| 26. | கல்வி | 12 |
| 27. | பெருந்தோட்டக் கைத்தொழில் | 02 |
| 28. | கடற்தொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி | 03 |
| 29. | சுதேச மருத்துவத்துறை | 03 |
| 30. | தேசிய மொழிகள், சமூக ஒருங்கிணைப்பு | 03 |
| 31. | காணி, காணி அபிவிருத்தி | 02 |
| 32. | சமூக சேவைகள் | 06 |
| 33. | விளையாட்டுத்துறை | 03 |
| 34. | கமத்தொழில் | 04 |
| 35. | போக்குவரத்து | 02 |
| 36. | கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தகம் | 02 |
| 37. | தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி | 01 |
| 38. | நிதி, திட்டமிடல் | 03 |
| 39. | வெகுஜன ஊடக, தகவல் | 08 |
| 40. | கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி | 01 |
| 41. | பாதுகாப்பு , நகர அபிவிருத்தி | 01 |
| 42 | துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் | 01 |
| 43. | உயர் கல்வி | 04 |
| 44. | வெளிநாட்டலுவல்கள் | 02 |
| 45. | தனியார் போக்குவரத்து சேவைகள் | 04 |
| 46. | வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை | 04 |
| 47. | தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி | 06 |
| 48. | கலாசார, கலை அலுவல்கள் | 04 |
| 49. | கமநல சேவைகள், வனசீவராசிகள் | 03 |
| 50. | மக்கள் தொடர்பு, மக்கள் அலுவல்கள் | 03 |

| தொடர் இல | ஆலோசனைக் குழுவின் பெயர் | கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 51. | தொலைத் தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் | 03 |
| 52. | வினைத்திறன் மேம்பாடு | 02 |
| 53. | சிவில் விமான சேவைகள் | 03 |
| 54. | சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு | 01 |

## 5.2.2 விசேட நடவடிக்கைகளுக்கான குழுக்கள்

### i. தெரிவுக் குழு

தெரிவுக்குழுவானது நிலையியல் கட்டளை 121 இன் கீழ் நியமிக்கப்படுகின்றது. ஏழாவது பாராளுமன்றத்தின் தெரிவுக் குழுவானது கௌரவ சபாநாயகரின் தலைமையில் உறுப்பினர்களான 17 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டதாக 2010 மே மாதம் 04 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டது.

2012 மார்ச் மாதம் 20 ஆம் திகதியன்று கூடிய குழுவானது நிலையியல் கட்டளை 129 (இ) இற்கமைவாக பொது மனுக்குழு மற்றும் ஆலோசனைக் குழுவுக்கு புதிய உறுப்பினர்கள்/ அமைச்சர்கள் 03 பேரை நியமிக்க நடவடிக்கை எடுத்தது. 2012 ஆம் ஆண்டினுள் குழுவானது இரண்டு தடவைகள் கூடியது.

### ii. சிறப்புரிமைகள் பற்றிய குழு

இக்குழு நிலையியல் கட்டளை இல.127இன் கீழ் நியமிக்கப்படுகின்றது. 7ஆவது பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் பற்றிய குழுவானது, 2010 மே மாதம் 04 ஆம் திகதி நியமிக்கப்பட்டதுடன், அது பாராளுமன்ற உறுப்பினர்களான 15 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு யூலை 03 ஆம் திகதியன்று கூடிய குழுவின் முதலாவது அமர்வின் போது கௌரவ நிமல் சிறிபால டி சில்வா தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

2012 ஆம் ஆண்டில் சிறப்புரிமை மீறல்கள் பற்றிய 22 முறைப்பாடுகள் குழுவுக்கு கிடைத்ததுடன் தற்போது இவற்றைக் குழு ஆராய்ந்து வருகின்றது.

### iii. உயர் பதவிகள் பற்றிய குழு

உயர் பதவிகள் பற்றிய குழு நிலையில் கட்டளை இல.128(அ) இன் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. இக்குழு சிரேஷ்ட அமைச்சர் கௌரவ ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் தலைமையின் கீழ் செயற்பட்டது. அமைச்சுக்களின் செயலாளர்கள், கூட்டுத்தாபனங்களினதும் சபைகளினதும் தலைவர்கள், வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரக உயரதிகாரிகள் என்ற வகையில் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட மற்றும் பெயர் நியமனம் செய்யப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்ந்து, அத்தகைய நபர்கள் தொடர்பான சிபார்சுகளை சமர்ப்பிப்பது இக்குழுவின் கடமையாகும்

2012 ஆம் ஆண்டில் உயர் பதவிகள் பற்றிய குழு 11 கூட்டத் தொடர்களை நடாத்தியுள்ளதுடன், அதன் போது 05 தூதுவர்கள், அமைச்சுகளுக்கான 17 செயலாளர்கள், 24 தலைவர்கள் குழு முன் அழைக்கப்பட்டதுடன், அவர்களின் தகைமைகள் பற்றி ஆராய்ந்து சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 05 வருட காலப் பகுதிக்குள் பதவிகளுக்கான தகைமைகளை ஆராய்ந்து அபேட்சகர்களை குழுவின் முன் அழைக்காதிருப்பதற்கான குழுவின் தீர்மானத்திற்கு அமைய, 05 தூதுவர்கள், 05 கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள், 04 அமைச்சு செயலாளர்கள் தொடர்பாக பதவி வகிக்க தகுந்தவர்களாக குழு முன்னிலையில் அழைக்கப்படாமல் அங்கீகரிக்கப்பட்டு சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

**iv. நிலையியல் கட்டளைகள் பற்றிய குழு**

நிலையியல் கட்டளை இல.123இன் கீழ் தாபிக்கப்படுள்ள இக்குழு கௌரவ சபாநாயகரின் தலைமையில் செயற்பட்டது. நிலையியல் கட்டளைகள் பற்றிய குழு 2012 ஆம் ஆண்டில் கூட்டத் தொடர்களை நடாத்தவில்லை.

**v. அரசாங்கக் கணக்குகள் குழு:**

அரசாங்கக் கணக்குக் குழு 2012ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கைப் பந்திகள், மிகைகள், ஒவ்வாமைகள் மற்றும் வேறு தொடர்புடைய நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு 48 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களை பரிசீலனை செய்துள்ளது. இந்த பரிசீலனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு, பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது.

| இல | நிறுவனத்தின் பெயர் | பரிசீலனை செய்த திகதி |
|---|---|---|
| 1. | சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு | 17.01.2012 |
| 2. | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 18.01.2012 |
| 3. | தேசிய மரபுரிமைகள், கலாசார அலுவல்கள் அமைச்சு | 19.01.2012 |
| 4. | கம்பனிப் பதிவுத் திணைக்களம் | 19.01.2012 |
| 5. | தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு | 08.02.2012 |
| 6. | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 09.02.2012 |
| 7. | நீதிச் சேவைகள் ஆணைக்குழு | 21.02.2012 |
| 8. | தேர்தல்கள் திணைக்களம் | 21.02.2012 |
| 9. | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 22.02.2012 |
| 10. | தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சு | 22.02.2012 |
| 11. | தபால் திணைக்களம் | 22.02.2012 |
| 12. | அரசாங்க நிதித் திணைக்களம் | 23.02.2012 |
| 13. | கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சு | 06.03.2012 |
| 14. | இலங்கை இராணுவப் படை | 08.03.2012 |

| இல. | நிறுவனத்தின் பெயர் | பரிசீலனை செய்த திகதி |
|---|---|---|
| 15. | மாவட்ட செயலகம் - கண்டி | 22.03.2012 |
| 16. | மாவட்ட செயலகம் - கேகாலை | 22.03.2012 |
| 17. | நிர்மாணிப்பு, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சு | 03.04.2012 |
| 18. | தொழில், தொழில் உறவுகள் அமைச்சு | 04.04.2012 |
| 19. | உயர் கல்வி அமைச்சு | 08.05.2012 |
| 20. | இலங்கைப் பாராளுமன்றம் | 09.05.2012 |
| 21. | வர்த்தகத் தீர்வை, முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் | 10.05.2012 |
| 22. | மாவட்ட செயலகம் - மாத்தளை மற்றும் இரத்தினபுரி | 22.05.2012 |
| 23 | பௌத்த அலுவல்கள் அமைச்சு | 23.05.2012 |
| 24. | தேசிய மொழிகள், சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு | 24.05.2012 |
| 25. | கூட்டுறவு ஊழியர்களின் ஆணைக்குழு | 05.06.2012 |
| 26. | நிதி, திட்டமிடல் அமைச்சு | 06.06.2012 |
| 27. | தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம் | 07.06.2012 |
| 28. | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் | 19.06.2012 |
| 29. | பாதுகாப்புத் திணைக்களம் | 20.06.2012 |
| 30. | மாவட்ட செயலகம் - குருநாகல் மற்றும் அநுராதபுரம் | 21.06.2012 |
| 31. | தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சு | 04.07.2012 |
| 32. | நீதி அமைச்சு | 05.07.2012 |
| 33. | சமூக சேவைகள் திணைக்களம் | 17.07.2012 |
| 34. | சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 18.07.2012 |
| 35. | ஓய்வூதியத் திணைக்களம் | 19.07.2012 |
| 36. | கமத்தொழில் திணைக்களம் | 09.08.2012 |
| 37. | மின்வலு, எரிசக்தி அமைச்சு | 21.08.2012 |
| 38. | மாவட்ட செயலகம் - களுத்துறை | 22.08.2012 |
| 39. | மாவட்ட செயலகம் - மாத்தறை | 22.08.2012 |
| 40. | முன்னாள் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தை அழைத்தல் | 18.09.2012 |
| 41. | நீதிச் சேவைகள் ஆணைக்குழு | 18.09.2012 |
| 42. | அரசாங்க தொழில்சாலை | 20.09.2012 |
| 43. | சமூக சேவைகள் அமைச்சு | 09.10.2012 |
| 44. | கல்வித் திணைக்களம் | 11.10.2012 |
| 45. | வன பாதுகாப்புத் திணைக்களம் | 23.10.2012 |
| 46. | ஆயுர்வேதத் திணைக்களம் | 24.10.2012 |
| 47. | மாவட்ட செயலகம் - அம்பாந்தோட்டை | 25.10.2012 |
| 48. | மாவட்ட செயலகம் - பதுளை | 25.10.2012 |

## (vi) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு தமது 03 உப குழுக்களின் ஒத்துழைப்புடன், 2012 ஆம் ஆண்டில் 196 அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய விசாரணைகளை மேற்கொண்டது. அதாவது பிரதான குழுவினால் 60 நிறுவனங்களும் I ஆம் உபகுழு, II ஆம் உபகுழு மற்றும் III ஆம் உபகுழு ஆகியவற்றினால் முறையே 57, 33 மற்றும் 46 என்றவகையிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்ட கணக்காய்வு அறிக்கைப் பந்திகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாது குழுவானது, சமகால நடவடிக்கைகள் மற்றும் அடிக்கடி சமூகத்தில் கலந்துரையாடப்பட்ட விவாதத்திற்குரிய விடயங்கள் தொடர்பாகவும் பரிசீலனைகளை மேற்கொண்டது.

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழுவானது தனக்கு அளிக்கப்பட்ட பணிகளை சிறப்பாக நிறைவேற்றி பிரதான குழுவினால் பரிசீலிக்கப்பட்ட 32 அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய இடைக்கால அறிக்கையை பாராளுமன்றத்துக்கு 2012 அக்டோபர் மாதம் 25 ஆம் திகதி சமர்ப்பித்தது.

**பிரதான குழுவினால் பரிசீலிக்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்ப் பட்டியல்**

| இல | குழுக் கூட்டங்கள் | திகதி |
|---|---|---|
| 1.* | தேசிய நூலக, ஆவணவாக்கல் சேவைகள் சபை | 21.02.2012 |
| 2. | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை | 22.02.2012 |
| 3. | லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி | 23.02.2012 |
| 4. | உடரட்ட அபிவிருத்தி அதிகார சபை | 23.03.2012 |
| 5. | இலங்கை கிரிக்கட் நிறுவனம் | 30.03.2012 |
| 6. | ஆயுர்வேத மருத்துவ சபை | 04.04.2012 |
| 7. | இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 09.05.2012 |
| 8. | இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் | 10.05.2012 |
| * | தேசிய நூலக, ஆவணவாக்கல் சேவைகள் சபை | 29.05.2012 |
| 9. | முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் | 23.05.2012 |
| 10. | சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | 24.05.2012 |
| 11. | கம்பஹா விக்கிரமாரச்சி ஆயுர்வேத பல்கலைக் கழகம் | 25.05.2012 |
| 12. | முதியோருக்கான தேசிய சபை | 05.06.2012 |
| 13. | சமுர்த்தி அதிகார சபை | 06.06.2012 |
| 14. | இலங்கை ஜேர்மனி தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபை | 07.06.2012 |
| 15. | ஏற்றுமதி அபிவிருத்திச் சபை | 08.06.2012 |
| 16. | இலங்கைத் தேயிலை சபை | 19.06.2012 |
| 17. | பின் அறுவடைத் தொழில்நுட்பவியல் நிறுவகம் | 20.06.2012 |
| 18. | இலங்கை ரெலிகொம் நிறுவனம் | 21.06.2012 |
| 19. | இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | 22.06.2012 |

| இல | குழுக் கூட்டங்கள் | திகதி |
|---|---|---|
| 20. | பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு | 04.07.2012 |
| 21. | தேசிய அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் | 05.07.2012 |
| 22. | மத்திய வங்கி | 06.07.2012 |
| 23. | அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | 17.07.2012 |
| 24. | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | 18.07.2012 |
| 25. | பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு | 07.08.2012 |
| 26. | நகர அபிவிருத்தி நிறுவனம் | 08.08.2012 |
| 27. | ஹோமியோபதி மருத்துவ சபை | 09.08.2012 |
| 28. | மக்கள் வங்கி | 10.08.2012 |
| 29. | தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | 22.08.2012 |
| 30. | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை | 19.09.2012 |
| 31. | நீர் வளங்கள் சபை | 20.09.2012 |
| 32. | ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை | 21.09.2012 |
| 33. | அணுச்சக்தி அதிகார சபை | 09.10.2012 |
| 34. | அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் | 10.10.2012 |
| 35. | தேசிய சேமிப்பு வங்கி | 11.10.2012 |
| 36. | அஸோஸியேட்டட் நியுஸ் பேபஸ் லிமிட்றட் | 12.10.2012 |
| 37. | மத்திய பொறியியல் உசாவுகைப் பணியகம் | 23.10.2012 |
| 38. | ஊழியர் சேமலாப நிதியம் | 24.10.2012 |
| 39. | தேசிய லொத்தர் சபை | 25.10.2012 |
| 40. | இலங்கை காப்புறுதிச் சபை | 12.11.2012 |
| 41. | இலங்கை முதலீட்டுச் சபை | 14.11.2012 |
| 42. | இலங்கை துறைமுக அதிகார சபை | 15.11.2012 |
| 43. | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 16.11.2012 |
| 44. | இலங்கை மின்சார சபை | 19.11.2012 |
| 45. | இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனம் | 20.11.2012 |
| 46. | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 20.11.2012 |
| 47. | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | 21.11.2012 |
| 48. | இலங்கை காணி மீட்டு, அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | 21.11.2012 |
| 49. | பிராந்திய அபிவிருத்தி வங்கி | 22.11.2012 |
| 50. | இலங்கை வங்கி | 22.11.2012 |
| 51. | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை | 23.11.2012 |
| 52. | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 23.11.2012 |
| 53. | மிஹின் லங்கா கம்பனி | 26.11.2012 |
| 54. | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம். | 26.11.2012 |

| இல | குழுக் கூட்டங்கள் | திகதி |
|---|---|---|
| 55. | எச்டிஎவ்சீ வங்கி | 28.11.2012 |
| 56. | சுயாதீன தொலைக்காட்சி மற்றும் லக்ஹண்ட வானொலி | 04.12.2012 |
| 57. | இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை | 04.12.2012 |
| 58. | லங்கா சதொச | 05.12.2012 |
| 59. | அபிவிருத்தி லொத்தர் சபை | 07.12.2012 |
| 60. | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | 07.12.2012 |

### (vii) பொது மனுக்கள் பற்றிய குழு

2012ஆம் ஆண்டில் குழுவின் முதலாவது அமர்வு 2012 சனவரி 17 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டதுடன், முழு ஆண்டினுள் 41 கூட்ட அமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் 03 விசேட குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன. 2012 ஆம் ஆண்டில் பொது மனுக்கள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் சுருக்கம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 2012 ஆம் ஆண்டில் குழுவிற்கு கிடைக்கப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை | - 828 |
| பல்வேறு காரணங்களினால் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படாத மனுக்களின் எண்ணிக்கை | - 349 |
| 2012 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை | - 418 |
| கௌரவ சபாநாயகர் அவர்களின் அங்கீகாரத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை<br>( 2011 ஆம் ஆண்டில் கிடைத்த மனுக்களும், 2012 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கௌரவ சபாநாயகர் அவர்களின் அங்கீகாரத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன) | - 588 |

**கௌரவ சபாநாயகர் அவர்களின் அங்கீகாரத்துக்குப் பின்**

| | |
|---|---|
| அமைச்சு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை | - 735 |
| ஒம்புட்ஸ்மானுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை | - 30 |
| குழுவினால் பரிசீலிக்கப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை | - 491 |
| நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை | - 25 |
| நிறைவு செய்யப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை | - 234 |

மேலும் 2010.04.22 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதி தொடர்பாக (7ஆம் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் தொடர்பாக) பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 128(5) இன் கீழ் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டிய குழுவின் அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன், இதனை 2013 ஆம் ஆண்டினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது.

### 5.2.3 விசேட குழுக்கள் :

**i. வேகமாக அதிகரித்துச் செல்லும் வாகன விபத்துகள் தொடர்பாக ஆய்வு செய்வதற்கான விசேட தெரிகுழு**

07வது பாராளுமன்றத்தில் இக்குழுவின் தவிசாளராக கௌரவ பீ. தயாரத்ன பதவி வகித்து வருகிறார். 2012 ஆம் ஆண்டில் இக்குழுவின் 03 கூட்டத் தொடர்கள் இடம்பெற்றுள்ளன.

**ii. 2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவினங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான விசேட தெரிகுழு**

பாராளுமன்றத்தின் சபை முதல்வரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கமைய 2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 22 அமைச்சுகள் மற்றும் விசேட செயற்பாடுகளுக்கான பணியகத்தின் 10 அமைச்சுக்கள் தொடர்பான செலவுத் தலைப்புகளைப் பற்றி கலந்துரையாடுவதற்காக 2012 நவம்பர் மாதம் 06 ஆம் திகதியன்று சபை முதல்வர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா அவர்களின் தலைமையிலான விசேட தெரிகுழுவொன்று தாபிக்கப்பட்டது.

இத்தடவை வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டு குழு நிலை நிகழ்ச்சி நிரலுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நாட்களின் எண்ணிக்கை 16 நாட்களாக மாத்திரம் இருந்தமையினாலும், அதன் பிரகாரம் அமைச்சொன்றின் செலவுத் தலைப்பு தொடர்பாக கலந்துரையாடுவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த நேரம் 02 மணித்தியாலங்களாக இருந்தமையினாலும், 2012.11.20 முதல் 2012.11.26 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கூடி கலந்துரையாடுவது இக்குழுவின் நோக்கமாக இருந்தது.

இக்குழு 07 கூட்டத்தொடர்களை நடாத்தியுள்ளதுடன் குழுவின் அறிக்கை 2012 திசெம்பர் 04 ஆம் திகதியன்று பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது. கலந்துரையாடப்பட்ட அமைச்சுகள் பின்வருமாறு

1. புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சு
2. விசேட செயற்பாடுகளுக்கான பணியகம்
3. சிறு ஏற்றுமதிப் பயிh;கள் ஊக்குவிப்பு அமைச்சு
4. பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு
5. அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு
6. தொலைத் தொடா;புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சு
7. தபால் சேவைகள் அமைச்சு
8. தொழில், தொழில் உறவுகள் அமைச்சு
9. சிவில் விமானச் சேவைகள் அமைச்சு
10. தேசிய மரபுhpமைகள் அமைச்சு
11. கலாசாரம், கலை அலுவல்கள் அமைச்சு
12. தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு
13. மக்கள் தொடர்பு, மக்கள் அலுவல்கள் அமைச்சு
14. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
15. அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
16. தொழிநுட்ப, ஆராய்ச்சி அமைச்சு

17. அனா;த்த முகாமைத்துவ அமைச்சு

18. சமூக சேவைகள் அமைச்சு

19. வெகுசன ஊடக, தகவல் அமைச்சு

20. காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

21. தனியாh; போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு

22. கூட்டுறவு, உள்நாட்டு வா;த்தக அமைச்சு

23. வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு

**iii. பாராளுமன்றத்தின் ஒழுக்கம், சம்பிரதாயங்கள் மற்றும் பாதுகாப்பை பேணிவருவதற்கான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வதற்கான விசேட தெரிகுழு**

பாராளுமன்ற உறுப்பினர்களான 07 உறுப்பினர்களைக் கொண்ட மேற்படி குழுவின் தவிசாளராக கௌரவ டியு குணசேகர செயற்படுகின்றார். 2012 மார்ச் மாதம் 06 ஆம் திகதி குழுவின் முதலாவது கூட்டம் நடாத்தப்பட்டதுடன், 2012 ஆம் ஆண்டில் 09 கூட்டத்தொடர்கள் நடாத்தப்பட்டன.

**iv. உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து திருமதி (கலாநிதி) ஏ. சிராணி பண்டாரநாயக்கவை நீக்குவதற்காக அரசியலமைப்பின் 107(2) உறுப்புரைக்கு அமைய மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களுக்கு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையொன்றின் தீர்மானத்தைச் சமர்ப்பிப்பதற்காக, குறித்த குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசேட தெரிகுழு**

2012 நவம்பர் மாதம் 14 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களினால் திரு. அநுர பிரியதர்சன யாப்பா அவர்களின் தலைமையில் மேற்படி குழு நியமிக்கப்பட்டதுடன், இக்குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான 10 உறுப்பினர்கள் உள்ளடங்கியிருந்தார்கள். 2012 நவம்பர் மாதம் 14 ஆம் திகதி குழுவின் முதலாவது கூட்டம் நடாத்தப்பட்டது. இதனையடுத்து இக்குழுவின் 08 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. 2012 டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி இதன் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

## 5.3 சட்டமூல அலுவலகம்

பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலங்களை, அரசியலமைப்புக்கு அமையவும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கமையவும் பின்வரும் சந்தர்ப்பங்களில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயாரித்தல், ஒப்புநோக்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றும் அதற்கு இடைநேர்விளைவான நடவடிக்கைகள் இவ் அலுவலகத்தினால் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

* 2012 ஆம் ஆண்டில் சட்டமூலங்கள் பற்றிய 57 வர்த்தமானப் பத்திரிகைகள் (13 அரசாங்க சட்டமூலங்கள், 44 தனியார் உறுப்பினர் சட்டமூலங்கள்) பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட அதேவேளை அவற்றில் 23 சட்டமூலங்கள் (15 அரச சட்டமூலங்கள், 08 தனியார் உறுப்பினர் சட்டமூலங்கள்) சட்டங்களாக நிறைவேற்றப்பட்டன.

**(2012 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டங்களின் பட்டியலை பார்வையிடுவதற்கு தயவு செய்து பின்னிணைப்பு 02 ஐ பார்க்கவும்)**

* 2012 ஆம் ஆண்டில் 02 சட்டவாக்க நிலைக்குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் 06 தனியார் சட்டமூலங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.

மேற்படி பணிகளுக்கு மேலதிகமாக 2012 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகளும் சட்டமூல அலுவலகத்தினால் ஆற்றப்பட்டுள்ளன.

( அ) 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை உள்ளடக்கியதாக அரசியலமைப்பை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அச்சிடும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

( ஆ) கனணியமயப்படுத்தப்பட்ட சட்டவாக்கச் சேவைகள் தகவல் முறைமையை பொதுமக்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மிகவும் பயன்மிக்கவாறு மேம்படுத்துவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.

( இ) சட்டமூலங்களுக்கு ஏற்புடைய சட்டவாக்க தகவல் முறைமையை இற்றைப்படுத்தல்.

( ஈ) பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுகள், மாகாண சபைகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கமைய சட்டமூலங்கள்/சட்டங்கள் தொடர்பாகவும் அவற்றை நிறைவேற்றும் செயற்பாடுகள் தொடர்பாகவும் தகவல்களை வழங்கல்.

## 5.4 சபை ஆவண அலுவலகம்:

*** 2012 ஆம் ஆண்டில் 85 சபை அமர்வுகள் நடைபெற்றன. பாராளுமன்ற அமர்வுகளுடன் தொடர்புடைய பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.**

(i) 85 பாராளுமன்ற அமர்வுகளுக்கான திருத்திய பதிப்புடனான 86 ஒழுங்குபத்திரங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அலுவலகத்தினுள்ளேயே பக்க வடிவமைப்புகள் தயாரிக்கப்பட்டு அச்சிடுவதற்காக அனுப்பப்பட்டதோடு, அவற்றை அதி வேக தபால் சேவை மூலம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் ஏற்புடைய ஏனைய நிறுவனத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்புவதற்கும் சபையில் விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(ii) மேலும், 2012 ஆம் ஆண்டில் பாராளுமன்றக் கூட்டங்கள் தொடர்பான கூட்டக் குறிப்புகள், 02 ஒழுங்குப் புத்தகங்கள், 21 அனுபந்தங்கள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு அச்சிடுவதற்கு அனுப்பவும், உரிய பிரிவுகளுக்கு பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(iii) அமைச்சுகளிலிருந்து அனுப்பப்பட்ட, பல்வேறு நிறுவனங்களுடன் சம்பந்தப்பட்ட 262 ஆண்டறிக்கைகள், 94 செயலாற்றுகை அறிக்கைகள், கண்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் உள்ளிட்டதான பல்வேறான 57 அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் மற்றும் அரசின் ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளை உள்ளடங்கிய 55 பிரேரணைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

(iv) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் ஒப்படைக்கப்பட்ட வாய்மூல/ எழுத்து மூல விடைகளுக்கான 1191 வினாக்கள் சரிபார்க்கப்பட்டு, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மொழிகளுக்கு

மொழிபெயர்க்கப்பட்டு ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டது. இவற்றில் 2012 ஆம் ஆண்டில் எழுப்பப்பட்ட 233 வினாக்களுக்கும், கடந்த வருடத்தில் (2011) அவகாசம் கோரப்பட்ட 277 வினாக்களுக்கும் விடைகள் வழங்கப்பட்டுள்ளன.

(v) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராளுமன்ற வினாக்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள கனணி நிகழ்ச்சித்திட்டத்தில் உரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டு நாளாந்தம் இற்றைப்படுத்தப்பட்டது.

(vi) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற 19 தனியார் உறுப்பினர் பிரேரணைகளையும், திகதி குறிக்கப்படாத 05 பிரேரணைகளையும் ஏற்றுக்கொண்டு சரிபார்க்கப்பட்டு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டு ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டன.

(vii) கட்சித் தலைவர்களினதும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினதும் 24 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அவற்றின் அறிக்கைகள் மும்மொழியிலும் வெளியிடப்பட்டன.

(viii) பாராளுமன்றக் கூட்டங்கள் நடைபெறுகின்ற நாட்களுக்காக மேன்மைத்தங்கிய சனாதிபதியிடமிருந்து கிடைக்கப்பெற்ற 12 நிருபங்கள், கௌரவ சபாநாயகரினால் விடுக்கப்பட்ட 77 அறிவிப்புகள், 12 அரசாங்க சட்டமூலங்கள் உள்ளடங்கலாக 53 சட்டமூலங்கள், உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புகள் மற்றும் கௌரவ அமைச்சர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பத்திரங்கள் ஆகியவற்றை சமர்ப்பித்தல் போன்றவற்றை உள்ளடக்கியதாக பாராளுமன்றத்தின் நாளாந்த நிகழ்ச்சிநிரலைத் தயாரித்து, பாராளுமன்ற அமர்வுகளை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 5.5 ஏனைய நிறுவனப் பிரிவுகள் மூலம் வழங்கப்பட்ட பங்களிப்புகள் சுருக்கமாக:

### ( 1 ) படைக்கலச் சேவிதர் திணைக்களம்:

(i) கௌரவ சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணிப்புரைக்கமைய, பாராளுமன்றத்தை பார்வையிடுவதற்கு வருகை தந்த பாடசாலை மாணவர்களுக்கு, மாணவர் பாராளுமன்ற குழுக்களுக்கு, இளைஞர் பாராளுமன்ற குழுக்களுக்கு, வளர்ந்தோர் அமைப்புகளுக்கு, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் விசேட கோரிக்கைகளுக்கு அமைய ஏற்புடைய குழுக்கள் உள்ளிட்ட 97 குழுக்களுக்கு, தொலைகாட்சிகளை பயன்படுத்தி விசேட விரிவுரைகள் நடாத்தப்பட்டன. அதற்கு மேலதிகமாக பின்வரும் பணிகளும் ஆற்றப்பட்டன.

* விசேட சமய நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.
* வெளிநாட்டுத் தூதுக் குழுக்கள் மற்றும் வெளிநாட்டு பாராளுமன்ற பிரதிநிதிகள் வருகை தருகின்ற சந்தர்ப்பங்களில் ஏற்புடைய நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.
* வெளிநாட்டு உறவுகள் மற்றும் ஒழுங்குமரபுகள் அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்கும் செயலமர்வுகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்கல்.
* பாராளுமன்றத்திற்குப் பக்கத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற கட்டடங்கள் தொடர்பாக பாதுகாப்பு இசைவுச் சான்றிதழ் வழங்கல்.

ii) 2012 ஆம் ஆண்டில் கடமை நிமித்தம் மற்றும் பாராளுமன்றத்தை பார்வையிடும் பொருட்டு வருகை தந்த அலுவலர்களுக்கு/ விருந்தினர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான சில விபரங்கள் பின்வருமாறு:-

| விபரங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| அரசாங்க அலுவலர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் | 200 |
| அரசாங்க அலுவலர் கூடத்துக்கான அனுமதிப் பத்திரங்கள் | 236 |
| பத்திரிகை நிருபர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் | 126 |
| வழங்கப்பட்ட மொத்த கலரி அனுமதிப் பத்திரங்கள் | 15,614 |
| பாராளுமன்றத்தை / அமர்வை பார்வையிடுவதற்கு வழங்கப்பட்ட குழு அனுமதிப் பத்திரங்கள் | 2,609 |
| குழுக்களாக வருகை தந்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை (மாதாந்தம் அண்ணளவாக) | 180,236<br>15,010 |

## 2) ஹன்சார்ட் திணைக்களம்

* 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற 85 பாராளுமன்ற அமர்வுகளுக்கான ஹன்சாட் அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

* ஆண்டினுள் நடாத்தப்பட்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு, அரச கணக்குக் குழு, உயர் பதவிகள் பற்றிய குழு, பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம், நிலையியற் குழுக்கள், ஆலோசனைக் குழுக்கள் (விசேட), மற்றும் அனைத்து விசேட தெரிகுழுக்கள் (வாகன விபத்துக்கள், பாராளுமன்றம், பிரதம நீதியரசர் மற்றும் வரவு செலவுத்திட்ட மதிப்பீடு) ஆகியவற்றின் 182 கூட்ட அமர்வுகளின் அறிக்கையிடல்கள் இடம்பெற்றுள்ளன.

* எதிர்கால ஆய்வு நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு பாராளுமன்ற விவாதத்தினதும் கால அறிக்கைகளை உள்ளடக்கிய, பாராளுமன்ற அமர்வுகள் தொடர்பான தொடர்ச்சியான சூசிகையிடலும் வகைப்படுத்தப்பட்ட விடயப் பதிவேடுகளும் பேணிவரப்பட்டன.

* பாராளுமன்ற அமர்வுகள் தொடர்பான மற்றும் அனைத்துக் குழுக்கள் தொடர்பான ஒலிப்பதிவு நாடாக்கள் பேணிவரப்படுதல்.

* பாராளுமன்ற அமர்வுகளின் உரைகள் அடங்கிய இருவட்டுகளை வெளியிடுவதற்குத் தேவையான இசைவு அறிக்கைகளை பெற்றுக் கொடுத்தல்.

**3 ) பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் அலுவலகம்**

* 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற 85 பாராளுமன்ற அமர்வுகள் மற்றும் பல்வேறுபட்ட குழுக் கூட்டங்களில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகளுக்கான சமகால உரைபெயர்ப்புகள் சிங்களம் / ஆங்கிலம் / தமிழ் ஆகிய மொழிகளில் வழங்கப்பட்டன.

* 2012 ஆம் ஆண்டினுள் 1411 "வாய்மூல விடைகளுக்கான வினாக்கள்" ஏனைய இரண்டு மொழிகளுக்கும் மொழிபெயர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு மேலதிகமாக சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்துக்கான பிரேரணைகள், தனியார் உறுப்பினர் பிரேரணைகள், பாராளுமன்ற குழுக்களின் அறிக்கைகள், கணக்காய்வுப் பந்திகள், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழுவின் அறிக்கைகள் மற்றும் விசேட தெரிகுழுக்களின் அறிக்கைகள் ஆகியவற்றை 03 மொழிகளிலும் மொழிபெயர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

* மேலும் பொது மனுக் குழுவினால் (சிங்களத்தில்) அனுப்பப்பட்ட 545 மனுக்களின் பொழிப்புகள் தமிழ் *** மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டன.

* ஆண்டினுள் பாராளுமன்றத்தை பார்வையிடுவதற்கு வருகை தந்த அலுவலர்கள் வெளிநாட்டுப் பிரமுகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தேவையான சந்தர்ப்பங்களில் விளக்க உரைகள் வழங்கப்பட்டன.

**4 ) பாராளுமன்ற நூலகம் :**

2012 ஆம் ஆண்டில் கௌரவ பிரதம அமைச்சர், கௌரவ சபாநாயகர், கௌரவ அமைச்சர்கள் மற்றும் கௌரவ எதிர்க் கட்சித் தலைவர் உள்ளடங்கலாக பாராளுமன்ற உறுப்பினர்களின் பல்வேறான தகவல் தேவைகளை நிறைவேற்றிக்கொடுக்கும் பொருட்டு பாராளுமன்ற நூலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு,

* பாராளுமன்ற சபையினுள் இடம்பெறுகின்ற உரைகள், வினாக்கள், மக்கள் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களுக்கும் சபை ஒத்திவைப்பு வேளை விவாதங்களுக்குமான சட்டமூலங்கள் பற்றிய பின்னணிக் குறிப்புகள், தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகள் உள்ளடங்கிய சுமார் 1250 தகவல் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

* பாராளுமன்றக் குழுக்கள், வெளிநாட்டுப் பயணங்கள், பொதுக் கூட்டங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற அரசியல் விவாதங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான சுமார் 425 தகவல் தேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

* கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆய்வு நடவடிக்கைகளுக்காகவும் பயன்பாட்டுக்காகவும் பின்வரும் நூலக வளங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் 2012 ஆம் ஆண்டில் நூலக சேர்மங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

  535 புத்தகங்கள்/ 40 பத்திரிகைகள்/ 20 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சஞ்சிகைகள்

* தற்காலத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ள பல்வேறு விடயங்களின் கீழ் நூலகத்தில் காணப்படுகின்ற முக்கியமான மற்றும் அரிதான ஆவணங்கள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் உபயோகத்திற்காக கணனிமயப்படுத்தப்பட்டன.

* கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் தகவல் தேவைகளுக்கு மேலதிகமாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் உள்ளிட்ட பணியாட்டொகுதியினர், அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள் மற்றும் பொது மக்களின் சுமார் 250 தகவல் தேவைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**5 ) தாபன / உறுப்பினர் சேவை அலுவலகங்கள்:**

i. 2012ஆம் ஆண்டில் பாராளுமன்றப் பணியாளர் தொகுதியின் 34 அலுவலர்கள் பல்வேறு வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மாநாடுகளில் பங்கேற்றதுடன், சில உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி அனுசரணைகள் மூலம் புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

ii. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் (SLIDA ), நெட் அசிஸ்ட் சர்வதேச நிறுவனம், அரச கணக்கீட்டு மற்றும் நிதிசார் நிறுவகம், நிர்மாணிப்புப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் (ICTAD ) ஆகியவற்றின் ஊடாக நடாத்தப்படுகின்ற பல்வேறான உள்நாட்டுப் பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளில் பங்கேற்பதற்கு பாராளுமன்ற பணியாட்டொகுதியினரைச் சேர்ந்த பல்வேறு பதவிகளை வகிக்கும் 55 உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

iii. 2012ஆம் ஆண்டில் பணியாட்டொகுதியினரின் பயன் கருதி பல்வேறு விடயங்களுடன் தொடர்புடைய 03 பொது விரிவுரைகள், செயலமர்வுகள், மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

Iv. பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் தமது பதவிகளின் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான அங்கீகரிக்கப்பட்ட வசதிகளும் சேவைகளும் பாராளுமன்றத்தில் உள்ள சம்பந்தப்பட்ட பிரிவுகளினாலும் ஏனைய வெளிவாரியான பிரிவுகளினாலும் தகுந்த முறையில் வழங்கப்படுவதை உறுதி செய்தல் உறுப்பினர் சேவைகள் பிரிவின் மூலம் பிரதானமாக நடைபெறுகின்றது.

## 6 ) வெளிநாட்டுத் தொடர்புகள் மற்றும் ஒழுங்குமரபுகள் அலுவலகம்:

பொதுநலவாயப் பாராளுமன்றச் சங்கம், அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் மற்றும் சார்க் பாராளுமன்ற உறுப்பினர்கள் சங்கம் ஆகிய அமைப்புகளுடன் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளும் சேவைகளும் ஆற்றப்பட்டன.

* மேற்படி அமைப்புகள் மூலம் நடாத்தப்பட்ட மாநாடுகள், செயலமர்வுகள், சுற்றுலாக்கள், கூட்டங்கள், கல்விச் சுற்றுலாக்கள் மற்றும் கருத்தரங்குளில் (26) பங்குபற்றுவதற்கு கௌரவ சபாநாயகர், கௌரவ பிரதி சபாநாயகர், கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்றச் செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம், உதவிச் செயலாளர் நாயகம் ஆகியோருக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

* 58 ஆவது பொதுநலவாய பாராளுமன்ற சம்மேளனத்தை 2012 ஆம் ஆண்டில் இலங்கையில் நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

* கௌரவ சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதி தவிசாளர் ஆகியோரை சந்திப்பதற்கு வருகை தந்த பல்வேறு வெளிநாட்டு பிரிதிநிதிகள் குழுக்களுடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குமரபுகள் மற்றும் ஊடக செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

## 7) தகவல் முறைமை மற்றும் முகாமைத்துவத் திணைக்களம்:

2012 ஆம் ஆண்டில் தகவல் முறைமை மற்றும் முகாமைத்தவத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளில், தகவல் தொடர்புசாதன தொழிநுட்ப உபகரணங்களின் வழங்கல் மற்றும் பராமரிப்பு, மென்பொருள் அபிவிருத்தி, தெரிவு செய்யப்பட்ட துறைகளில் சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்ளல், பாராளுமன்ற வலையமைப்பின் உட்கட்டமைப்பினைப் பராமரித்தல் மற்றும் தரமுயர்த்துதல், மின் அஞ்சல் மற்றும் முனைப்புடனான டிரெக்டரி சேவையை உயர்தரப்படுத்தல், பாராளுமன்ற இணையத் தளத்தை தயாரித்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் ஆகியவை பிரதானமானவைகளாகும்.

2012 ஆம் ஆண்டில் இதற்கு மேலதிகமாக, 'i-parliament ' வலையமைப்புக்கு புதிய மொடியுல்கள் மற்றும் செயற்பாடுகள் சேர்க்கப்பட்டதோடு, பிரவேச முகாமைத்துவ முறைமையொன்றை தாபிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

(2012.12.31ஆம் திகதி )

# இணைப்பு - 01

## இலங்கைப் பாராளுமன்றத்தின் நிறுவனக் கட்டமைப்பு



## இணைப்பு - 02

| *இலங்கைச் சட்டங்கள்*<br>*2012*<br>**சட்டமூல அலுவலகம் - பாராளுமன்றம்** | | | |
|---|---|---|---|
| **சட்ட இல.** | **பெயர்** | **சட்டமூல இல.** | **அத்தாட்சிப்பபடுத்தப்பட்டது** |
| 01/2012 | இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கை கிளை) (கூட்டிணைத்தல்) | 29 | 2012-01-17 |
| 02/2012 | ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) | 73 | 2012-02-09 |
| 03/2012 | இலங்கை முதலீட்டுச் சபை (திருத்தம்) | 137 | 2012-02-15 |
| 04/2012 | வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தம்) | 142 | 2012-02-15 |
| 05/2012 | இலங்கை மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர் கழகம் (கூட்டிணைத்தல்) | 01 | 2012-02-21 |
| 06/2012 | மாத்தறை ராஹுல கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கொழும்புக் கிளை) (கூட்டிணைத்தல்) | 18 | 2012-03-08 |
| 07/2012 | சேர்பெறுமதி வரி (திருத்தம்) | 158 | 2012-03-30 |
| 08/2012 | உண்ணாட்டரசிறை (திருத்தம்) | 159 | 2012-03-30 |
| 09/2012 | நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) | 160 | 2012-03-30 |
| 10/2012 | துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) | 161 | 2012-03-30 |
| 11/2012 | பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்) | 162 | 2012-03-30 |
| 12/2012 | நிதி | 163 | 2012-03-30 |
| 13/2012 | பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதிக் கல்லூரி (திருத்தம்) | 129 | 2012-05-04 |
| 14/2012 | ரீ.பீ. ஏக்கநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) | 31 | 2012-05-06 |
| 15/2012 | புத்த சிராவக பிக்குப் பல்கலைக்கழக (திருத்தம்) | 174 | 2012-07-11 |
| 16/2012 | பலன புத்தர் சிலையை நிருமாணிப்பதற்கான ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) | 35 | 2012-08-06 |
| 17/2012 | த.மு. தசநாயக்க சமூக சேவைகள் மற்றும் அறக்கொடை மன்றம் (கூட்டிணைத்தல்) | 105 | 2012-08-06 |
| 18/2012 | கலாநிதி மாலனி பொன்சேகா மன்றம் (கூட்டிணைத்தல்) | 107 | 2012-08-06 |
| 19/2012 | பிய தசுன மன்றம் (கூட்டிணைத்தல்) | 113 | 2012-08-06 |
| 20/2012 | ரணவிரு சேவா அதிகார சபை (திருத்தம்) | 179 | 2012-10-08 |
| 21/2012 | உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) | 53 | 2012-11-15 |
| 22/2012 | உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்) | 54 | 2012-11-15 |
| 23/2012 | ஒதுக்கீடு | 184 | 2012-12-08 |